07

A. M. D. G.

# அர்ச். ஞானப்பிரகாசியாரின்
# பத்திப் பரணி.

Printed and Published by Rev. Br. Joseph, S. J.,
Supdt. St. Joseph's Industrial School Press,
Trichinopoly.

…26.

Q6:417
M26
48579

# அர்ச். ஞானப்பிரகாசியார்.

மரணை வாலிபரின் பாதுகாவலரும் அருமையான புதுமைகள் இயற்றுபவருமான இந்த அர்ச்சியசிஷ்டர் இராச பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தும் நமது இரட்சகரைப்போல் சீவிக்கக் கருதி எளிமைத்தனத்தையும் சிறுமைத்தனத்தையும் நாடி பற்பல [illegible]ஷ்டங்களைச் சகித்து சேசுசபையில் சேர்ந்தார். [illegible]மனசுவின் புண்ணியமென்னப்பட்ட கற்பில் சிறந்திருந்தும் தமது சரீரத்தைத் தபசால் கண்டித்து அப்புண்ணியத்தைத் தம்மிடத்தில் பிரகாசிப்பித்தார். தமது 24-ம் பிராயத்தில் 1591-௵ ஜூன்-௴ 20-உ அர்ச்சியசிஷ்டராக மரித்தார்.

---

A. M. D. G.

# அர்ச். ஞானப்பிரகாசியாரின் பத்திப் பரணி.

## ஞானப்பிரகாச சீவிய ஏற்பாடு.

22092

" கத்தோலிக் வாலிபர்களாகிய நாங்கள் உரோமாபுரியில் எங்களின் மகத்துவம் நிறைந்த பாதுகாவலராகிற அர்ச். ஞானப்பிரகாசியார் கல்லறைமீது நிற்பதாகப் பாவித்து, அவருடைய மகிமை தோத்திரத்திற்காக உலகத்திலுள்ள சகல கத்தோலிக் வாலிபர்களோடும் ஏகோபித்து அநுசரிக்க வாக்களிக்கும் உயரிய கோட்பாடுகளும் சீவிய ஒழுக்கங்களுமாவன :

1. எத்தனைபேர் விசுவாசத்தில் நெகிழ்ந்தாலும் அதை இழந்தாலும் நாங்கள் கத்தோலிக் சத்திய விசுவாசத்தில் என்றும் மன உறுதியாய் நிலைத்து நிற்போம்.

2 கிறீஸ்துநாதரின் பத்தினியாகிய திருச்சபையைப் பிரமாணிக்கமாய் நேசித்து, எங்கள் தாயென்று மதித்து விரோதிகள் கையிலிருந்து பாதுகாத்து வருவோம்.

3. விசுவாச அறிவிலும் வேத ஒழுக்கத்திலும் தினந்தினம் சிறந்து ஓங்கி விளங்குவது எங்கள் கடமையெனக் கொள்வோம்.

148579



4. தன்னை அடக்கியாள்வதே வீரத்திலும் வீரமென நிச்சயித்து. அர்ச்சியசிஷ்டர் பாவனையாக இயன்றபொழுதெல்லாம் சற்பிரசாதநாதரை ஆத்தும போசனமாக உட்கொள்வதாலும் பரிசுத்த கன்னிகை மட்டில் உருக்கமான பத்தி வைப்பதாலும், ஆத்தும பரிசுத்ததனத்தைக் காப்பாற்றுவோம்.

5. பிரமாணிக்கம், உண்மைத்தனம், பெற்றோர் மற்றோர்மட்டில் நன்றிகாட்டல், எங்களுக்குச் சமானமானவர்களோடு கௌரவம் வாய்ந்த சிநேகம், உதாரகுணம், பலவீனரிடம் பெருந்தன்மையான நடத்தை முதலிய அடங்கிய கத்தோலிக் பழக்க வழக்கங்களைக் கையாடுவோம்.

இத்தீர்மானங்களை ஆசீர்வதிக்கவும், அவற்றை அநுசரிக்கத் தேவையான வரப்பிரசாதத்தை அளிக்கவும், பலன் தரக்கூடிய பிறசிநேக ஆத்தும இரட்சணிய அலுவலுக்கு நாங்கள் யோக்கியமுள்ளவர்களாக இடையறுது யத்தனிக்கவும், கிறீஸ்துநாதருடைய இராச்சியத்தில் கிறீஸ்துநாதருடைய சமாதானத்தை நிலைப்பிக்கவும் பரிசுத்த கன்னிமரி, அர்ச். ஞானப்பிரகாசியார் வேண்டுதல்கள் வழியாக சேசுவின் திரு இருதயத்தைக் கெஞ்சி மன்றுடுகிறேம்."

## அர்ச். ஞானப்பிரகாசியார் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். மரியாயே,

மாசில்லாத அர்ச். ஞானப்பிரகாசியாரே,

தேவமாதாவின் புதுமையினாலே பிறந்தவரே,

பூலோக ஆவியை உட்கொள்ளுமுன்னே சேசுக் கிறீஸ்துநாதருடைய ஞானப் புத்திரனானவரே,

முந்தின வார்த்தையாக சேசு மரியே என்று உச்சரித்தவரே,

புத்தியறிந்த க்ஷணமே உம்மை முழுவதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தவரே,

ஏற்கனவே தேவவரப்பிரசாதமடைந்தவரே,

தேவவரப்பிரசாதத்திலே நிலைகொண்ட அர்ச்சியசிஷ்டரே,

நீர் அடைந்த தேவவரப்பிரசாதத்தை மிகவும் அர்ச்சிக்கப்பண்ணினவரே,

மேலாங்கிஷத்துக்குக் கீழாங்கிஷத்தை உத்தம மேரையாகக் கீழ்ப்படியப் பண்ணினவரே,

ஒன்பது வயதிலேதானே உமது கற்பை தேவமாதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தவரே,

உத்தம மனஸ்தாபத்தினாலே சோபமடைந்தவரே,

போசனத்திலே ஆச்சரியமான ஒறுத்தல் செய்தவரே,

கடின தபசினால் விளங்கினவரே,

சரீரத்தை முழுதும் பகைத்தவரே,

ஒருக்காலும் மோக விசாரப்படாத பரிசுத்தரே,

கற்புக்கு விரோதமான சந்தோஷம் அணுகாதவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உள்ளிந்திரியங்களைத் தருமவொழுங்கிலே நிலைப் பித்தவரே,

பஞ்சேந்திரியங்களை அடக்கி மகா எச்சரிக்கை யோடே காத்தவரே,

சரீரமுள்ள சம்மனசென்கிற பெயர் பெற்றவரே,

சரீரமில்லாதவனொன்று சொல்லப்பட்டவரே,

தேவமாதாவினால் சேசுசபைக்கு அழைக்கப்பட் டவரே,

உமக்குச் சொந்தமான துரைத்தனத்தை முனிந்த வரே,

உலக மகிமை பாக்கியத்தைை முழுதும் புறக்க ணித்தவரே,

அரண்மனையிலுள்ளவர்களுக்குத் தருமவொழுக் கம் படிப்பித்தவரே,

வாலிபரை அறநெறியிற் செலுத்தி வழி காண் பித்தவரே,

சுற்றத்தார்பேரிலே மிகுந்த பற்றுதலற்றவரே,

சிந்தின இரத்தத்தைக்கொண்டு தகப்பனுடைய மனதை இளகப்பண்ணி சந்நியாசியாக உத்தாரம் பெற்றவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

அர்ச். இஞ்ஞாசியாருக்குப் பிரியமுள்ள குமார னானவரே,

மடத்திலே ஆறு வருஷகாலம் பறக்கிற பட்சிக் கொத்த விரைவோடே ஞானக்காரியங்களில் வர்த் தித்தவரே,

சேசுசபையின் கட்டளைகளைச் சாங்கோபாங்க மாகச் செலுத்தினவரே,

மகா சிரவணமுள்ள அர்ச். ஞானப்பிரகாசியாரே,

முழு தரித்திரத்தை அனுசரித்தவரே,

கற்பனையினுடைய காந்தியே,

தியானத்திலே நெடுநேரஞ் செலவழித்தவரே,

ஜெபத்திலே அற்ப பராக்கில்லாதவரே,

எப்போதும் எவ்விடத்திலும் பரவசமாயிருந்தவரே,

தேவ காரியங்களை எளிதாய் யோசித்தறிந்தவரே,

ஞான நினைவை விடுகிறதிலே கக்கிசப்பட்டவரே,

தீராத வர்ம மனஸ்தாபங்களைத் தீர்த்தவரே,

சமாதானத்தை வருத்துவிக்கிற அர்ச். ஞானப்பிரகாசியாரே,

தாழ்ச்சியிலே உயர்ந்தவரே,

மிகுந்த சாதுகுணமுள்ளவரே,

ஆச்சரியமான பொறுமையுடைத்தானவரே,

புறத்தியார்பேரில் மகா சிநேகம் வைத்தவரே,

தேவ சிநேக மிகுதியினாலே பத்தி சுவாலகருக்கொப்பானவரே,

சேசுக்கிறீஸ்துநாதருடைய திருக்காயங்களின் பேரில் வெகு பத்தி வைத்தவரே,

தேவநற்கருணைக்கு உத்தம ஆராதனை செய்தவரே,

தேவமாதாவினுடைய வியாகுலங்களின்பேரில் மிகுந்த இரக்கமுள்ளவரே,

சந்நியாசிகளுக்கு உன்னத படிப்பினையானவரே,

அடுத்திருக்கிற மரணத்தை அறிந்து அகமகிழ்ந்தவரே,

பிறர் சிநேகத்தினாலே பிராணனைச் செலவழித்தவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இருதயத் திருநாளிலே பாக்கியமான மரணத்தையடைந்த அர்ச்சியசிஷ்டவரோ,

மாசில்லாததனத்தினலே பரகதிக்குச் சென்றவரோ,

ஆச்சரியமான தபசினலே மிகுந்த மோக்ஷானந்தமடைந்தவரோ,

தேவ சிநேக மிகுதியினல் உயர்ந்த பத்திராசனத்திலிருக்கிறவரோ,

பெலனும் உதாரமும் இரக்கமுமுள்ள அர்ச். ஞானப்பிரகாசியாரோ,

எண்ணிக்கையில்லாத பாவிகளுடைய மனதைத் திருப்பினவரோ,

வியாதிக்காரரைக் குணமாக்குகிற ஞான சஞ்சீவியே,

கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலே,

இக்கட்டுகளை விலக்குகிறவரோ,

மோகச் சேற்றினலே அசுத்தப்பட்டவர்களைக் கற்பினற் சுத்தமாக்குகிறவரோ,

கற்பைக் காக்கிற அர்ச். ஞானப்பிரகாசியாரோ,

இக்காலத்திலே எண்ணிக்கையில்லாத அதிசயங்களைச் செய்கிறவரோ,

உம்மைப் பிரார்த்திக்கிற சகலருடைய மன்ருட்டுகளை அடையச் செய்கிற அர்ச். ஞானப்பிரகாசியாரோ,

உலகத்தின் பாவங்களை ... மற்றதும்.

முத.—சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத் தக்கதாக,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

து.—அர்ச். ஞானப்பிரகாசியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வாதி கர்த்தராகிய சர்வேசுரா! தேவரீர் அர்ச். ஞானப்பிரகாசியாரைச் சிறுபத்திலேதானே தெரிந்து கொண்டு அவர் ஒரு அற்ப குற்றமுதலாயில்லாதிருக்கவும், எல்லாரும் ஆச்சரியப்படத்தக்கக் கடின தபசு பண்ணவும் பரிபூரண ஆசிர்வாதங் கொடுத்தருளினீரே. அவருடைய பேறுபலன்களையும் மன்றாட்டுகளையும் பார்த்து, நாங்கள் இதுவரைக்கும் பாவிகளாயிருந்தாலும், இனிமேலாகிலும் அவரைப்போலே பாவமில்லாதிருக்கவும், அவருடைய உத்தம தபசை நாங்கள் அனுசரித்து நடக்கவும், எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுகளையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி.

ஆமென்சேசு.

## கற்பென்கிற புண்ணியத்தைக் கேட்கிற செபம்.

இவ்வுலகில் சம்மனசைப்போலே பரிசுத்தராய் நடந்த அர்ச். ஞானப்பிரகாசியாரே! உமது அபாத்திரனை ஊழியனாகிய அடியேன் விசேஷ பயபக்தியோடே என்னுடைய ஆத்தும சரீர கற்பை உமது அடைக்கலத்திலே வைக்கிறேன். அதை உமது பரிசுத்த கற்போடு ஒன்றாகக்கூட்டி செம்மறிக்குட்டியான சேசுக்கிறீஸ்துநாதருக்கும் கன்னிகைகளுக்கு இராக்கினியான பரிசுத்த தேவமாதாவுக்கும் ஏற்ற பாத காணிக்கையாக ஒப்புக்கொடுத்தருளும். அடியேன் சாவான பாவத்திலே விழாதபடிக்கும், யாதொரு துர்க்கந்த மோக பாவத்தைக் கட்டிக்கொள்ளாதபடிக்கும் என்னைக் காத்து, நான் சோதனையிலேயும் பாவச்சமயத்திலேயும் இருக்கிறபோது, தேவரீர் என் இருதயத்திலே நின்று அசுசியான நினைவுகளையும், ஆசைகளையும் அகற்றி, நித்திய மோட்ச பாக்கியத்தையும், நரக ஆக்கினைகளையும், எனக்காகச் சிலுவையில் அறையுண்டு மரித்த சேசுக்கிறீஸ்துநாதனையும் நினைப்பூட்டி, தேவபயத்தை என் இருதயத்தில் உறுதியாய்ப் பதியச்செய்து, நான் இவ்வுலகில் உம்மைக் கண்டுபாவித்த பின், உம்மோடுகூடப் பரகதியில் தேவதரிசனை அடையும்பொருட்டு, தேவ சிநேகாக்கினியை என் இருதயத்தில் எரியப்பண்ணியருளும். ஆமென் சேசு. பர. பிரி. திரி.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008.
148579

## ஆறு மன்றாட்டு

1. அர்ச். ஞானப்பிரகாசியாரே! தேவரீர் இந்தப் பூலோகத்திலே முழுதும் பிறக்குமுன்னேதானே தேவ இஷ்டப்பிரசாதத்தை அடைந்து அதை மரண பரியந்தம் இழந்துபோகாமல் அதிலே நிலைக்கொண்டவராய் நடந்தீரோ; அப்படியே நாங்கள் தேவ இஷ்டப் பிரசாதத்தைக் கைக்கொண்டு, அதை மரணபரியந்தம் இழந்துபோகாமல் இருக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

2. அர்ச். ஞானப்பிரகாசியாரே! தேவரீர் புத்தியறிந்த ஏழு வயதிலே சர்வேசுரனை முழுமனதோடே நேசித்துப் புண்ணிய வழியிலே சாங்கோபாங்கமாக நடக்கத்துவக்கி, மென்மேலும் அதிகமதிகமாக மரண பரியந்தம் புண்ணியங்களிலே வர்த்தித்துக்கொண்டு வந்தீரோ; நாங்கள் இதுவரைக்கும் சர்வேசுரனை சிநேகியாமல் அநேக பாவங்களைக் கட்டிக்கொண்டிருந்தாலும், இனியாகிலும் சர்வேசுரனை முழுமனதோடே நேசித்து, அவருக்கு ஏற்க நடந்து, புண்ணியங்களிலே அதிகரிக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

3. அர்ச். ஞானப்பிரகாசியாரே! தேவரீர் ஒன்பது வயதிலே தேவமாதாவுக்குத் தோத்திரமாக உமது கற்பை ஒப்புக்கொடுத்து, அதற்கு அற்பமாகிலும்

மாசணுகாதபடிக்கு ஆச்சரியமான தபசுசெய்து பஞ்சேந்திரியங்களைக் காக்கிறதிலே அதிசயமான எச்சரிக்கையோடே நடந்துவந்தீரே ; நாங்கள் இதுவரைக்கும் கற்புக்குப் பழுதாக நடந்திருந்தாலும், இனிமேல் சரீரத்தை ஒறுத்து, ஆன தபசுகளினால் அதைக் கீழ்ப்படுத்தி, எச்சரிக்கையோடே பஞ்சேந்திரியங்களைக் காத்து, மரணபரியந்தம் பரிசுத்த கன்னியாஸ்திரியாயிருக்கிற தேவமாதாவுக்குத் தோத்திரமாகப் பழுதற்ற கற்போடே நடக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

4. அர்ச். ஞானப்பிரகாசியாரே ! தேவரீர் இந்த உலக மகிமைத் துரைத்தன முதலான நன்மையெல்லாம் வெறுத்து, சர்வேசுரனுக்கு அதிக பிரியப்படுகிறதற்குச் சந்நியாசிகள் மடத்திலே சேர்ந்து, அங்கே பிரியாத மனதாய்ச் சம்மனசுபோல சர்வேசுரன்பேரில் எப்பொழுதும் முழுக் கருத்தாயிருந்து ஆண்டவருக்குத் தோத்திரம் செய்துகொண்டு வந்தீரே ; நாங்கள் இந்தப் பிரபஞ்ச நன்மைகளின் ஆசையினாலே எங்கள் ஆத்துமத்துக்குச் சேதம் வருத்திக்கொள்ளாமல், உத்தம கருத்தோடே ஆண்டவரைச் சேவிக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

5. அர்ச். ஞானப்பிரகாசியாரே ! தேவரீர் இந்தப் பூலோகத்திலே சஞ்சரித்த கொஞ்ச நாளுக்குள்ளே

அநேக புண்ணியங்களைச் செய்து வெகு ஞானத்திரவியங்களைச் சம்பாதித்து மரணகாலத்திலே பலன் கைக்கொள்ளுகிற நேரம் வந்ததென்று விசாரித்து, உம்மாலே சிநேகிக்கப்பட்ட சர்வேசுரனைக் காணவேணுமென்று ஆசைப்பட்டு, இதோ மோட்ச பேரின்பத்தை அநுபவிக்கப் போகிறேனென்று சந்தோஷமாய்க் காலம்பண்ணினீரோ! நாங்கள் புண்ணிய நெறியிலே சுறுசுறுப்போடே நடந்து, மரண சமயத்திலே பயந்து தத்தளியாமல் அமரிக்கையோடே நல்ல மரணம் அடையத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

6. அர்ச். ஞானப்பிரகாசியாரே! அர்ச். மரியமதலேனம்மாளும் மகாத்துமாவாகிற அர்ச். சீலியவென்கிறவளும் தரிசனத்திலே கண்டபடியே தேவரீர் மோட்சத்திலே மனோவாக்குக்கெட்டாத பாக்கியத்தை அநுபவித்து, இந்தப் பரதேசத்திலுள்ள மனுமக்களுக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்கிறதற்குச் சர்வேசுரனாலே வரம் பெற்றிருக்கிறீரோ; பாவிகளாயிருக்கிற எங்கள்பேரிலே உம்முடைய தயாபமுள்ள திருக்கண்களைத் திருப்பி எங்கள் ஆத்தும சரீரத்துக்கு வேண்டிய அவசரங்களிலே உதவிசெய்து காப்பாற்றி, மோட்ச இராச்சியத்திலே உம்மோடேகூட முடிவில்லாத பாக்கியத்தை அநுபவிக்கத்தக்கதாக எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

மு.—கிறீஸ்து கொடுக்கிறேமென்று திருவுளம் பற்றின நன்மைகளுக்கு,

தி.—நாங்கள் பாத்திரவான்களாகத்தக்கதாக, அர்ச். ஞானப்பிரகாசியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

தேவ வரப்பிரசாதங்களைத் தந்தருளுகிற சர்வேசுரா! அர்ச். ஞானப்பிரகாசியாரிடத்திலே அதிசயமான பரிசுத்த நடக்கையும் ஆச்சரியத்துக்குரிய தபசும் விளங்கப்பண்ணினீரே. அவருடைய மாசில்லாத நடக்கையைப் பார்த்து நடக்காத நாங்கள் அவருடைய புண்ணியங்களினுலேயும் வேண்டுதலினுலேயும் அவருடைய தபசைப் பின்செல்லத்தக்கதாக உம்முடைய திருக்குமாரனுகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்கு கிருபை செய்தருளும் சுவாமி. ஆமென்சேசு.

---

## ஆறு ஞாயிறு வாரப் பத்தி.

இப்பத்தி சகலராலும் விசேஷமாய் வாலிபராலும் மிகுந்த இலாபகரத்துடன் அநுசரிக்கப்பட்டு வருகிறது. நெடுங்கால அநுபவததிலிருந்து ஆறு ஞாயிறு பத்தி முயற்சிகள் அநேக பெரும் நன்மைகளையும் வரங்களையும் கிடைக்கச் செய்கின்றனவென்று சமீபகாலத்தில் (1926-ம் வரு ஜூன்-மீ 13-உ) பரி

சுத்த பிதா அறிவித்தார். பரிசுத்ததனத்தைக் காப்பாற்றுதல், தேவ அழைத்தலை அறிந்து பின்பற்ற வெளிச்சம், அர்ச். மரியின்பேரில் சிநேகம், படிப்பில் அநுகூலமாகியவை முக்கிய பலன்களென்னலாம்.

விடாமல் ஆறு ஞாயிறுகளில், நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணித் திவ்விய நற்கருணை வாங்கிச் சிறிது நேரந் தியான யோசனையோ, வாய்ச் செபங்களோ, பத்திக் கிருத்தியங்களோ புரிபவர்கள் ஒவ்வொரு தடவையும் பரிபூரணப் பலனை அடைவார்கள். ஞாயிறுகள் அர்ச்சியசிஷ்டர் திருநாளுக்கு முன் பின் கொண்டாடப்படுவதால் பாதகமில்லை.

---

## அர்ச்சியசிஷ்டர் திருநாளில் பரிபூரணப் பலன்.

சாதாரணமாய் ஜூன்-மீ 21-௳ சிறப்பிக்கப்படும் திருநாளன்று தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று, அவ்விழா கொண்டாடப்படும் கோவிலின் பீடத்தைச் சந்தித்து அர்ச். பாப்பானவர் கருத்துகளுக்காக வேண்டிக்கொள்பவர்களுக்குப் பரிபூரண பலன் உண்டு.

மேற்றிராணியார் உத்தரவின்பேரில், வருஷத்தின் எந்த நாளிலும், எந்த இடத்திலும், உற்சவம் கொண்டாடிப் பரிபூரணப் பலனை அடைய வழியுண்டு.

---

## அர்ச். ஞானப்பிரகாசியார் தம்மை ஒப்புக் கொடுத்த சேபம்.

அர்ச். மரியாயே, என் உன்னத அரசியே, இப்போதும், என் வாழ்நாட்களில் அநுதினமும், என் மரணத்தறுவாயிலும், நான் தாழ்ச்சியோடு என் ஆத்துமத்தையும், சரீரத்தையும் உமது தயாப கரங்களிலும், உமது விசேஷித்த அடைக்கலத்திலும் ஒப்படைக்கிறேன். என் நம்பிக்கை, ஆறுதல் முழுவதையும் உமது பாதத்தில் வைக்கிறேன். என் சகல நிற்பாக்கியங்களிலும், துன்ப துரிதங்களிலும் உமது சரணமாய் ஓடிவருகிறேன். என் சீவனையும், அதின் முடிவையும் உமது அடைக்கலத்தில் வைத்து, உமது பரிசுத்த சிபாரிசினாலும், உம்முடைய பேறு பலன்களாலும், என் கிரியைகள் யாவும் உமது சித்தத்துக்கும், உமது திருக்குமாரனுடைய சித்தத்துக்கும் ஏற்க அமைந்து நடத்தப்படும்படியாக அநுக்கிரகம் செய்தருளும்படி உம்மைப் பிரார்த்திக்கிறேன்.—ஆமென் சேசு.

---

## அர்ச். ஞானப்பிரகாசியாருக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும் சேபம்.

ஓ மகத்துவ பிரதாபமுள்ள அர்ச். ஞானப்பிரகாசியாரே! இவ்வுலகத்தில் நீர் சீவித்த அதியுன்னத பரிசுத்த சீவியத்தினிமித்தம் வானதூதனையொத்த வாலிபனென்று திருச்சபையால் சிறப்பு நாமம் புனைந்த உமக்கு நான் முழுமனது, முழு இருதயப் பத்தியுடன் என்னைமுழுவதும் இன்றைக்கு நேர்ந்து கொள்ளுகிறேன்.

ஓ உத்தமமான மாதிரிகையே! ஓ நன்மையும் வல்லமையும் வாய்ந்த பாதுகாவலரே! உம்முடைய உதவி ஒத்தாசை எனக்கு எவ்வளவோ தேவை! உலகமும் பசாசும் என்னை ஏமாற்றுகின்றன; ஆசாபாசங்களின் உக்கிரமம் என்னைத் தாக்குகிறது; என் வயதிற்கேற்பட்ட பலவீனமும் மன மாறுபாடும் எனக்கு செவ்வையாய்த் தெரிந்திருக்கின்றன. சம்மனசையொத்த அர்ச்சியசிஷ்டவரே! இளந்தாரிகளின் மகிமையும், பெருமையும், ஆபரணமும், சிநேகமும் உதவியொத்தாசையுமான நீரல்லாது, வேறு யார் என்னைக் காப்பாற்ற வல்லவர்? ஆகையால் முழு மனதுடன் உம்மிடம் ஓடிவருகிறேன்; முழு இருதயத்துடன் என்னை உம்மிடம் ஒப்படைத்து நேர்ந்துகொள்ளுகிறேன். மேலும் உமதுபேரில் விசேஷ பத்தி வைக்கவும், உம்முடைய உத்தமமான புண்ணியங்களைப்பற்றி விசேஷமாய் சம்மனசுக்கியைந்த உமது கற்பைப்பற்றி உமக்கு மகிமை செலுத்தவும், உமது சுகிர்த நடக்கைகளைக் கண்டுபாவிக்கவும், என் உடனொத்தவர்நடுவில் உமது பத்தியை வளர்க்கவும், என் கடைசிமூச்சு பரியந்தம் உமது பரிசுத்தத் திரு நாமத்தை உச்சரித்துப் புகழவும் வாக்களிக்கிறேன், மனதாரத் தீர்மானிக்கிறேன். இவ்விதமாக என் ஆத்துமத்தையும், புலன்களையும், இருதயத்தையும் என்னைமுழுவதுமே கையளிக்கிறேன்.

ஓ நேசமிகுந்த அர்ச். ஞானப்பிரகாசியாரே! ஆகையால் இன்று நான் உமக்குச் சொந்தம்; என்றும் உம்முடையவனுயிருக்கக் கருத்தாயிருக்கிறேன். நீரும் என்னை உமது பொருளாகக் காத்துப் பரிபாலித்

148579



தருளும்; நானும் உமக்குப் பணிபூண்டு மகிமை செலுத்துவதால் சேசுநாதருக்கும் கன்னிமரிக்கும் அதிக மேன்மையான தொண்டு புரிந்து மகிமைதரவும், கடைசியாக மோட்சத்தில் சதாகாலத்திற்கும் உம்மோடுகூட என் சர்வேசுரனைத் தரிசித்துத் தோத்தரிக்கவுங் கிருபை புரிவீராக! ஆமென்சேசு.

(200-நாட் பலன்.)

---

## தேவ அழைப்பைத் தெரிந்துகொள்ளச் செபம்.

ஞானத்திற்கும் ஆலோசனைக்கும் கர்த்தரான என் சர்வேசுரா! உம்மை மாத்திரமே சந்தோஷிப்பிக்கவும் தேவ அழைத்தல் எனக்கு இன்னதென்று நான் தெரிந்துகொள்வதில் உமது திருச்சித்தத்திற்கு முழுதும் இணங்கியிருக்கவும் மெய்யான ஆசையை என் இருதயத்தில் மூட்டியருளினீரோ! என் தாயரான பரிசுத்த கன்னிகையினுடையவும் எனது பாதுகாவல் அர்ச்சியசிஷ்டர்களுடையவும் விசேஷமாய் அர்ச். சூசையப்பர் அர்ச். ஞானப்பிரகாசியாருடையவும் மன்றாட்டுகளால் உமது மகிமைக்காக உழைக்கவும், எனது இரட்சணியத்தை அடையவும் உமது திருவுளத்தை நிறைவேற்றுபவர்களுக்குத் தேவரீர் வாக்களித்த மோட்ச சம்பாவனையைக் கைப்பற்றவும் நான் எந்த அந்தஸ்தைக் கையேற்றுக்கொள்ள வேண்டுமென்று அறியவும் அறிந்து அதைத் தழுவவும் தேவையான வரப்பிரசாதத்தை எனக்குத் தந்தருளும். ஆமென்சேசு.

PERMISSU SUPERIORUM.
Imprimatur: ✠ AUGUSTINUS, S.J, *Ep. Trichinopolit.*

## அட்டவணை.

பக்கம்.

ஞானப்பிரகாச சீவிய ஏற்பாடு ... 1

அர்ச். ஞானப்பிரகாசியார் பிரார்த்தனை ... 3

கற்பென்கிற புண்ணியத்தைக் கேட்கிற செபம். 8

ஆறு மன்றாட்டு ... ... 9

ஆறு ஞாயிறு வாரப் பத்தி ... ... 12

அர்ச்சியசிஷ்டர் திருநாளில் பரிபூரணப் பலன். 13

அர்ச். ஞானப்பிரகாசியார் தம்மை ஒப்புக்கொடுத்த செபம் ... ... 14

அர்ச். ஞானப்பிரகாசியாருக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும் செபம் ... ... 14

தேவ அழைப்பைத் தெரிந்துகொள்ளச் செபம். 16

# புதுப் புஸ்தகம்.

## அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம்.

### இரண்டாம் நூற்றாண்டு உற்சவ ஞாபகம்.

வாலிபரின் பாதுகாவலரென்று அர்ச். பாப்புமாரால் திரும்பத் திரும்ப பிரசித்தப்படுத்தப்பட்டவரும் மகிமையில் இலங்கிப் புதுமைகள் புரிபவருமான ஒரு பெரிய அர்ச்சியசிஷ்டவரைப்பற்றிக்கூறும் ஒரு சிறு நூல். சகல மனிதர்களுக்கும் விசேஷமாய் வாலிபர் அனைவருக்கும் மிக்கப் பயன் விளைவிக்கத்தக்கது. பரிசுத்த பிதாவாம் பதினோராம் பத்திநாதர் இரண்டு மாதங்களுக்குமுன் அர்ச்சியசிஷ்டவர்பேரில் எழுதி விடுத்த நேர்த்தியான அப்போஸ்தலிக் நிருபமும் இதில் சேர்த்திருக்கிறது. அர்ச். பாப்பானவர் ஏவுதலால் உலகமெங்கும் அடுத்த வருஷம் ஜூன்-மீ 21-வுக்குள் சிறப்பான கொண்டாட்டங்கள் வாலிபர்கள் நடத்துவார்களென்பது சகல கிறீஸ்துவர்களும் அறிந்த விஷயம்.

ஞானப்பிரகாசியார் அர்ச்சியசிஷ்ட பட்டம் பெற்ற இரண்டாம் நூற்றாண்டு உற்சவ ஞாபகமாக இது எழுதப்பட்டுள்ளது.

அர்ச்சியசிஷ்டவரைக்குறித்து கற்பையடைய வேண்டிக்கொள்ளுஞ் செபம் முதலான செபங்கள் கடைசியில் ...பட்டிருக்கின்றன.

...விலை: அணா 3.